**Dinamalar**
**Title :**
**Author :**
**Location :**
**Article Date : 10/03/2016**

# முன்னாள் மாணவர் தின கொண்டாட்டம்

## உயர் நீதிமன்ற நீதிபதிகள் பங்கேற்பு

**சென்னை, அக். 3–**

லயோலா கல்லூரியின் முன்னாள் மாணவர் தினம், விமரிசையாக கொண்டாடப்பட்டது. அதில், லயோலாவில் படித்த, உயர் நீதிமன்ற நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள் கவுரவிக்கப்பட்டனர்.

சென்னை, லயோலா கல்லூரியில், முன்னாள் மாணவர் தினம், நேற்று விமரிசையாக கொண்டாடப்பட்டது. கல்லூரி தலைவர் ஜெயபதி பிரான்சிஸ் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில், லயோலாவின் முன்னாள் மாணவரும், வி.ஐ.டி., பல்கலையின் வேந்தருமான ஜி.விஸ்வநாதன் முக்கிய விருந்தினராக பங்கேற்றார்.

முன்னாள் மாணவர்களான, உச்ச நீதிமன்ற நீதிபதி செல்லமேஸ்வர், உயர் நீதிமன்ற நீதிபதிகள் டி.எஸ்.சிவஞானம், சி.டி.செல்வம், வி.பாரதிதாசன், ஆர்.சுதாகர், எம்.எம்.சுந்தரேஷ், உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர்கள், முன்னாள் டி.ஜி.பி., பாஸ்கர் ராவ் உள்ளிட்ட பலர் கவுரவிக்கப்பட்டனர்.

குடும்பத்தினருடன் வந்திருந்த முன்னாள் மாணவர்களுக்கு, அறுசுவை உணவுடன் விருந்து அளிக்கப்பட்டது. முன்னாள் மாணவர்கள், பல்வேறு விளையாட்டு போட்டிகளில், தங்கள் வயதையும் மறந்து உற்சாகமாக விளையாடி, மாணவர் தினத்தை கொண்டாடினர்.